[1990 ஆகஸ்ட் 23

(அ) மற்றும் (ஆ) : வட சென்னையில் உள்ள அனைத்து பெரிய தொழிற்சாலைகளும், தனித்தனியே கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களை நிறுவி உள்ளன. மேற்படி தொழிற்சாலைகளை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் முறையாகக் கண்காணித்து வருகிறது. மேலும் மணலி, எண்ணூர் பகுதிகளில் அமைந்துள்ள அதிகமாக மாசுப்படுத்தும் தன்மையை உடைய பல தொழிற்சாலைகளை வாரியம் கண்டறிந்து அவைகளை கண்காணித்து வருகிறது.

திரு. இரா. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் திடீர் விசிட் மூலம் அந்தத் தண்ணீரை எடுத்து, ஆய்வுக்கு அனுப்ப ஆவன செய்வார்களா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி ; எந்த ஆலையில் அதைப்போல் நடைபெறுகிறது என்று சொன்னால் அதைப் பரிசீலனை செய்ய அரசு தயாராக இருக்கிறது.

சேலம் மாவட்டத்தில் புதிய பால் பண்ணை தொடங்கும் திட்டம்.

*8166—திரு. எஸ். ஆர். சிவலிங்கம் :

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சேலம் மாவட்டத்திலேயே மற்றொரு புதிய பால் பண்ணை தொடங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திருபுவனம் பட்டு கைத்தறி நெசவாளர் சங்கம்.

*3146—திரு. செ. இராமலிங்கம் :

மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டம் திருபுவனம் பட்டு கைத்தறி நெசவாளர் சங்கத்தில் கூட்டுறவுச் சட்ட விதிகளுக்கு முரணாக

1990 ஆகஸ்ட் 23]

இயக்குநர்கள், நிர்வாகிகள் நியமிக்கப்பட்டிருப்பதாக அரசுக்கு புகார் வந்துள்ளதா ?

(ஆ) அதுகுறித்து அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) திருபுவனம் பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் கூட்டுறவு சட்ட விதிகளுக்கு முரணாக இயக்குநர்கள்—நிர்வாகிகள் நியமிக்கப்பட்டிருப்பதாக அரசுக்கு புகார் எதுவும் வரவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த நெசவாளர் பட்டு கூட்டுறவுச் சங்கத்தில் ஏராளமாக முறைகேடுகள் நடைபெற்றிருப்பதாக தணிக்கை அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். மேலும் இதேபோன்ற இந்தக் கூட்டுறவுச் சங்கத்தில் கொள்முதல் செய்ததில் கடந்த காலத்தில் ஏராளமான ஊழல் நடைபெற்றிருப்பதாகவும் புகார் அரசுக்கு வந்திருக்கிறது. அது குறித்து ஏதேனும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

9-50 மணி

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, கடந்த காலத்தில் ஏற்பட்ட அந்த நிர்வாகச் சீர்கேடு சம்பந்தமாக திருபுவனம் பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் அந்தப் பணி ஆய்வில் இருக்கிறது. விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விசைத்தறி நெசவாலை.

*8576—திரு. கே. ரவி அருணன் :

மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், கடையத்தில் கூட்டுறவு முறையில் விசைத்தறி நெசவாலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும் ?